நாடோடி

தொகுத்தது

கிழவியும், குமரியும்

நாடோடி
தியாகராயநகர், சென்னை 17

முதற் பதிப்பு அக்டோபர் 1947

சகல உரிமையும் ஆசிரியருக்கே

விலை ரூபாய் ஒன்று

கபீர் அச்சுக்கூடம்
திருவல்லிக்கேணி, MS. 524
நாடோடி MS. 120

முன்னுரை

நல்ல ஊறுகாய் இருந்தால்தான் சாப்பாடு ருசிக்கும். சாப்பிட்ட சாப்பாட்டை ஜீரணிக்கவும் முடியும். அதைப் போல துக்கடாக்கள் இருந்தால்தான் இலக்கிய விருந்து ருசிக்கும், அதை ஜீரணிக்கவும் முடியும்.

தமிழ்நாட்டில் இப்பொழுது எத்தனையோ நண்பர்கள் தமிழர்களுக்கு இலக்கிய விருந்து அளித்துவருகிறார்கள். ரேஷன் காலமாய் இருப்பதால் வேறு ஒரு விருந்தும் அளிப்பதற்கு இல்லை. ஆனால் முக்கால்வாசிப் பேர் இன்னும் தமிழனுக்கு பத்தியமான உணவையே அளித்துவருகிறார்கள். ஊறுகாயைக் கண்ணில்கூடக் காட்டுவது இல்லை. தமிழனுடைய உடம்பு கெட்டு விட்டால் என்ன பண்ணுவது என்ற பயமாக இருக்கலாம்.

இதுவரையில் தளையுண்டு கிடந்த தமிழனைப்பற்றி அவர்கள் கவலைகொண்டது என்னமோ, ஒருவேளை, நியாயமாக இருக்கலாம். ஆனாலும் இனியும் அது பொருந்தாது. தமிழன் தளையறுத்து சுதந்திர புருடனாகிவிட்டான். இனி அவன் தன் இஷ்டப்பட்ட உணவை உட்கொள்ளலாம். நாக்குக்கு ருசியுள்ள பதார்த்தங்களையும் ஒரு கை பார்க்கலாம்.

நான் ஊறுகாய்ப் பிரியன். சாப்பாட்டுக்குமேல் ஊறுகாய் சாப்பிடுவேன். அதைப்போலவே துக்கடாப் பிரியன். ஆகவே, வெகு காலமாக நான் படித்த புத்தகங்களில் அங்கங்கே நல்ல சாரமான விஷயங்களைக்

கண்டபோதெல்லாம் ஜாக்கிரதையாக, ஒரு தனி நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்தேன்.

அவற்றைத் தமிழர்களும் அனுபவிக்கட்டும் என்று 'துக்கடா சீரிஸ்' என்ற தொகுதியில் அவ்வப்பொழுது வெளியிட ஏற்பாடு செய்திருக்கிறேன்.

போன மாதம் "ஸ்திரீகள், ஜாக்கிரதை" என்ற புத்தகம் வந்தது. இப்பொழுது "கிழவியும், குமரியும்" என்ற இப் புத்தகம் வந்திருக்கிறது.

இப் புத்தகங்களில் அங்கங்கே நம்மை வயிறு குலுங்கச் சிரிக்கவைக்கும் துக்கடாக்கள் இருக்கும். பக்கத்திலே நம் சிந்தனையைத் தூண்டும் அறிவு விஷயங்களும் இருக்கும். எத்தனையோ அனுபவ மொழிகளும் இருக்கும்.

ஆனால் ஒன்று. இத் துக்கடாக்களைத் தமிழர்கள் ஒரே நாளிலேயே படித்து முடித்துவிடவேண்டாம்.

அவ்வப்பொழுது பொழுதுபோகாத வேளைகளில், அல்லது அலுப்பாய் இருக்கும் சமயங்களில், அங்கொன்று, இங்கொன்றுமாகப் பொறுக்கி எடுத்து வாசித்து அனுபவிக்கலாம்.

அப்படி வாசித்து அனுபவிப்பதுதான் இத் துக்கடாக்களை ரஸிப்பதற்குச் சரியான முறை.

தியாகராயநகர்
17-10-47

நாடோடி

கிழவியும், குமரியும்

யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ருமேனியா வழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு ரயில் வண்டியில் ஒரு ஜெர்மானியன், ஒரு ருமேனியன், ஒரு கிழவி, ஒரு குமரி ஆக நால்வர் இருந்தனர். ரயில் வண்டி ஒரு டன்னலில் நுழைந்ததும் கும்பிருட்டாகி விட்டது. அப்பொழுது யாரோ யாரையோ முத்தமிடும் சப்தமும் அதற்கு பிறகு யாரோ யாரையோ கன்னத்தில் அறையும் சப்தமும் கேட்டது. டன்னலை விட்டு வண்டி வெளிச்சத்திற்கு வந்தது. ஜெர்மானியனின் கன்னம் சிவந்து காணப்பட்டது. வண்டியில் இருந்த நால்வரும், பின்வருமாறு தங்களுக்குள் நினைத்துக் கொண்டார்கள்.

கிழவி:—இந்தக் குமரி மிகவும் நல்ல பெண் போல் இருக்கிறது. அது தான் தன்னை முத்தமிட்ட ஜெர்மானியனை கன்னத்தில் அறைந்து விட்டாள்.

குமரி:—எதற்காக அந்த ஜெர்மானியன் போயும் போயும் அந்தக் கிழவியை முத்தமிட்டான் என்று தெரியவில்லையே?

ஜெர்மானியன்:—இந்த ருமேனியன் பலே சாமர்த்திய சிலிதான். அந்தக் குமரியை இவன்

முத்தமிட்டுவிட்டு எனக்கு அறை வாங்கிக் கொடுத்து விட்டானே!

ருமேனியன் :—ஏது, நாம் பண்ணின தந்திரத்தில் இந்த மூன்று பேரும் ஏமாந்து விட்டார்கள் போல் இருக்கிறதே. நான் மாட்டில் என் கையை முத்தமிட்டுவிட்டு ஜெர்மானியனை அறையப்போக இவர்கள் மூவரும் என்னென்னவோ நினைக்க ஆரம்பித்து விட்டார்களே!

ஒரு சீனக் கதை

டாக்டர் வெல்லிங்டன் கூ லண்டனில் நடந்த கூட்டம் ஒன்றில் கீழ்க்கண்ட அழகிய கதை ஒன்றைச் சொன்னாராம்.

சீனாவில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒரு தடிக் கழி இருக்குமாம். குடும்பத்தில் உள்ள யாரையாவது தண்டிக்க வேண்டுமானால் குடும்பத்தலைவர் அந்தக் கழியைக் கொண்டு அவர்களை அடிப்பார். ஒரு சமயம் ஒரு நூறு வயதுத் தகப்பனார் தம் எழுபத்தைந்து வயது பிள்ளையின் மீது அக்கழியை பிரயோகித்து விட்டார். அடி பட்டதும் பிள்ளை அழத் தொடங்கினார். இதைக் கண்டதும் தகப்பனாருக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. இதுவரையில் தகப்பனார் எத்தனையோ தடவை பிள்ளையை அடித்திருக்கிறார். பிள்ளை அழுதது கிடையாது. ஆகவே என்ன காரணம் என்று விசாரித்தார். அதற்கு

பிள்ளை, "நீங்கள் அடித்ததற்காக அழவில்லை. ஆனால் அடி வழக்கம் போல் வலுவாக விழவில்லை. உங்கள் வலு குறைந்து விட்டதே என்று வருத்தப் பட்டு அழுதேன்" என்று சொன்னாராம்.

—ஹரிஜன்

பதினொன்று

இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

முதல் நண்பர் :—இந்த வேடிக்கையைக் கேட்டாயா? பதினொண்ணாவது மாதத்தில் பதினொண்ணாவது நாள். அன்றைக்குத் தான் என் பையனுக்கு பதினொண்ணாவது பிறந்த நாள். எங்கள் வீட்டின் நம்பரும் பதினொண்ணு. ஆபீசுக்குப் போய்ச் சேர்ந்த போது மணி பதினோறு அடித்து பதினோறு நிமிஷம். சாயந்தரம் ரேசுக்குப் போயிருந்த போது பதினோறு குதிரைகள் ஓடின என்று தெரிந்தது. ஆகவே நான் பதினோராவது குதிரைமீது பணம் கட்டினேன்.

இரண்டாவது நண்பன் :—ஆச்சரியமாக இருக்கிறதே! அப்பொழுது அதுதான் ஜயித்தது என்று சொல்லு.

முதல் நண்பன் :—இல்லை. அது பதினொன்றாவதாக வந்தது.

ரஷ்யாவில்

ஒரு காலத்தில் ருஷியக் குதிரைப் படையில் உள்ளவர்கள் தங்கள் குதிரைகளைத் தாங்களே தங்கள் பணச் செலவில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று ஒரு விதி இருந்தது. காலாட் படையில் இருந்த ஒரு சிப்பாய் குதிரைப் படைக்கு மாற்றப் பட்டதும் குதிரை வாங்கப் பணம் வேண்டும் என்று தகப்பனுருக்குக் கடிதம் எழுதினன். அதற்கு தகப்பனர் பின் வருமாறு பதில் அனுப்பினர்:— "குதிரை வாங்குவதற்காக பணம் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். ஆனல் குதிரைப் படையிலிருந்து கடற் படைக்கு மாற்றிக் கொண்டுவிடாதே. கப்பல் வாங்கிக் கொடுக்க என்னிடம் பணம் கிடையாது!"

ஜெர்மனியில்

ஜெர்மனியில் முன்பு யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் வீட்டில் உள்ள எல்லாருமே யுத்த சேவையில் ஈடுபட வேண்டியிருந்தது. அதைப்பற்றி பின்வரும் வேடிக்கைக் கதை ஒன்று சொல்லப் பட்டது.

வேலை செய்துவிட்டு களைப்புடன் புருஷன் வீடு திரும்புகிறன். ஆனல் மனைவியை வீட்டில் காணவில்லை. அதற்குப் பதில் அவள் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறுள். "நான் ஏ. ஆர். பி. பயிற்சிக்குச் சென்றிருக்கிறேன். நான் திரும்பிவர

நாழியாகும்" என்று அக்கடிதத்தில் கண்டிருக்கிறது. உடனே புருஷன் "நான் இராணுவப் பயிற்சிக்குச் சென்றிருக்கிறேன். நானும் திரும்பி வர நாழியாகும்" என்று கடிதம் எழுதி வைத்து விட்டுச் செல்லுகிறான். கொஞ்சம் நாழி கழித்துப் பையனும் பெண்ணும் வீட்டுக்கு வருகிறார்கள். அவர்கள் தாங்கள் வாலிபர் சங்கத்துக்குச் செல்வதாகவும் தாங்களும் வர நாழியாகும் என்றும் எழுதி வைத்துவிட்டுச் செல்லுகிறார்கள். கடைசியாக நிர்மானுஷ்யமாகக் கிடக்கும் அந்த வீட்டிற்குத் திருடன் வருகிறான். அவனும் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுச் செல்லுகிறான். "ஹிட்லர் மஹாராஜனுகை இருக்கட்டும். வீட்டில் ஒருவரும் இல்லை. திருடர்களாகிய எங்கள் பாடு வேட்டைதான்" என்று அக்கடிதத்தில் கண்டிருக்கிறது.

என். எஸ். கிருஷ்ணன்

விடுதலையான ஸ்ரீ. என். எஸ். கிருஷ்ணனைப் பார்ப்பதற்கு நாகர் கோயிலுக்கு ஒரு நண்பர் சென்றிருந்தார். அப்பொழுது ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் தமது மனைவி ஸ்ரீமதி மதுரத்தைச் சுட்டிக் காட்டிச் சொன்னாராம். "சிறையில் டாண் என்று ஐந்து மணிக்கு எனக்குக் காப்பி கிடைத்துவிடும். இங்கே என்னடா என்றால் காப்பி கிடைக்க மணி ஏழு ஆகிறது. நான் மீண்டும் சிறைக்கே சென்று விடுகிறேன்."

மன்மதன்

ஒரு வஸ்துவை இரண்டாகப் பிளக்கும் வில்லாளிகள் பலர் இருக்கின்றனர். இருவரை ஒன்ருகச் சேர்க்கும் வில்லாளி மன்மதன் ஒருவன்தான்.

ரயிலில் நடந்தது

ரயிலில் இரண்டு முதல் வகுப்புப் பிரயாணிகள் சிநேகிதமாயினர். இரவு தூங்கவேண்டிய சமயம் வந்தது. ஒரு பிரயாணி உடனே எல்லா ஜன்னல் கதவுகளையும் மூட ஆரம்பித்தார். அதைப் பார்த்து விட்டு இரண்டாம் பிரயாணி "எப்பொழுதும் ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்க வேண்டும். இல்லாவிடில் டாக்டர்கள் பாடு வேட்டைதான்" என்ருர். அதற்கு இரண்டாம் பிரயாணி, "ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு தூங்கிஞல் திருடர்கள் பாடு வேட்டையாகி விடுமே! அதற்கு என்ன செய்வது!" என்று கேட்டார்.

ஓய்வே கிடையாது

கடவுள் ஆறுநாளில் உலகத்தை சிருஷ்டித்து ஓய்வு எடுத்துக் கொண்டார். பிறகு மனிதரைப் படைத்து விட்டு ஓய்வு எடுத்துக் கொண்டார். பிறகு ஸ்திரீகளைப் படைத்தார். அதற்குப் பிறகு யாருக்குமே ஓய்வு கிடையாது.

எகிப்தில்

எகிப்தில் தந்தி இலாகாவினால் வரும்படி மிகவும் அதிகம். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, ஒவ்வொரு தடவையும் புது சர்க்கார் ஏற்படும் பொழுது (அதாவது வருஷத்திற்கு இரண்டு தடவை என்று வைத்துக் கொள்ளுங்களேன்) எல்லாரும் பிரதம மந்திரிக்கும், மற்ற மந்திரிகளுக்கும் வாழ்த்துத் தந்தி அடிப்பார்கள். தங்களுக்கு ஏதாவது சர்க்கார் உத்தியோகம் கிடைக்காதா, அல்லது இருக்கிற சர்க்கார் உத்தியோகம் உயராதா என்னும் ஆசை தான் இதற்குக் காரணம்.

தந்தி இலாகாவுக்கு நிறைய வரும்படி கிடைப்பதற்கு இன்னொரு காரணம் எல்லா விலாசமும் ஒரு முழ நீளம் இருப்பதுதான். ஒரு சின்ன ஆசாமிக்குக் கூட விலாசம் ஷரியா ஷேக்மகம்மத் ஆகமத் அல்பீ அப்துல்வஹாப் பாஷா, ஷேம் எல்நெஸ்ஸீம் பில்டிங், கஸ்ர்எல் தௌபாரா, கெய்ரோ என்று இத்தனை நீளம் இருக்கும்.

இந்த ஒரு விலாசத்துக்கே தந்தி சார்ஜ் ஒரு ஷில்லிங் ஆகி விடாதா ?

—ரமேசஸ்

லோபிகள்

லோபியைப் போன்ற கொடைவள்ளல் உலகத்தில் இதுவரை உண்டானது மில்லை, உண்டாகப் போவது மில்லை. மற்றவர்கள் என்றால் தங்கள் சொத்தை தங்கள் கையால் எடுத்துப் பிறருக்கு வழங்குகின்றனர். லோபியோ என்றால் தான் தொட்டால் கூட எங்கே ஒட்டிக்கொண்டு விடுமோ என்று பயந்து பூரணமாகத் தானம் பண்ணுகிறான்.

ரயில் வண்டிகள்

"ரயில் வண்டிகள் எப்பொழுது பார்த்தாலும் தாமதமாக ஓடுகின்றனவே. ரயில்வே அட்டவணை இருந்து என்ன பிரயோஜனம்?"

"ரயில்வே அட்டவணை இல்லாவிட்டால் ரயில் வண்டிகள் தாமதமாகவே ஓடுகின்றன என்று எப்படித் தெரியும்?"

தெரிந்ததா?

ஒன்றும் தெரியாதவன், ஆனால் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும் தெரியாதவன், அவன் ஒரு முட்டாள். அவனை விலக்கிவிடு.

ஒன்றும் தெரியாதவன், ஆனால் தெரியாது என்று தெரிந்தவன். அவனுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். சொல்லிக்கொடு.

எல்லாம் தெரிந்தவன், ஆனால் தெரியும் என்று தெரியாதவன், அவன் தூங்குகிறான், அவனை எழுப்பு.

எல்லாம் தெரிந்தவன், தனக்கு எல்லாம் தெரியும் என்றும் தெரிந்தவன், அவன் அறிவாளி. அவனைப் பின்பற்று.

சராசரி வயது

நியூஜிலந்து	67
ஸ்வீடன்	63
நார்வே	63
இங்கிலாந்து	62
அமெரிக்கா	62
கனடா	60
பிரான்ஸ்	57
ரஷ்யா	45
ஜப்பான்	43
எகிப்து	33
இந்தியா	27

இந்த மாயப் பிரபஞ்சத்தில் நாம் அதிக நாள் வாழ விரும்பவில்லை என்பதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

ஸைபீரியாவில்

ஸைபீரியா மிகவும் குளிரான பிரதேசம். மாரிக்காலம் வந்தால் அங்குள்ள நதிகள் அப்படியே உறைந்து விடும். அப்பொழுது நதியிலுள்ள மீன்களும் உறைந்து கிடக்கும். கோடை வந்து ஜலம் உருகும் போது இந்த மீன்களும் உயிர் பெற்றுத் துள்ளி எழும்.

சீமையில்

சீமையில் பஸ்களில் செல்லும் அநேக பிரயாணிகளை பரிசோதித்துப் பார்த்து விட்டு பஸ்களில் அவர்கள் உட்காரும் ஆசனங்கள் சம மட்டத்திலிருந்து 17 டிகிரி மேலே தள்ளி இருந்தால் தான் மிகவும் சௌகரியமாக இருக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஸ்திரீகள்

ஸ்திரீகள் பார்வையில் இருக்கும் சக்தி நம் சட்டங்களுக்குக் கிடையாது. அவர்கள் கண்ணீருக்கு உள்ள பலம் வாதங்களுக்குக் கிடையாது.

—சாவில்

வானத்துக்குக் கிரகங்கள் எப்படியோ அப்படி பூலோகத்துக்கு ஸ்திரீகள். வானத்து கிரகங்கள் மானிட சமூகத்தை ஆட்டி வைக்கின்றன. ஸ்திரீகள் ஆண் சமூகத்தை ஆட்டி வைக்கிறார்கள்.

—ஹால்கிரேவ்

நாணலை ஒத்தவர்கள் ஸ்திரீகள். ஒரு சிறு காற்று பட்டாலும் அதற்கு அசைந்து கொடுப்பார்கள். ஆனால் எவ்வளவு பெரிய புயல் அடித்தாலும் ஒடியமாட்டார்கள்.

—வாட்லி

சற்று அளவுக்கு மீறிப்பழகினாலும் ஸ்திரீகள் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர்களை அலட்சியம் செய்தாலோ, அவர்களுக்கு வரும் கோபம் சொல்லி முடியாது. தங்கச் சட்டம் போடப்பட்டிருந்த படமாயிருந்தாலும் சரி, தன் படத்தைத் திருடியதற்காக எந்த ஸ்திரீயும் யார் மீதும் வழக்குத் தொடரமாட்டாள். ஆனால் படத்தை விட்டு விட்டு தங்கச் சட்டத்தை மாத்திரம் திருடிக் கொண்டு போய் விட்டானோ, அவனுடைய உயிருக்கு நான் உத்தர வாதம் சொல்ல முடியாது.

—கோல்ட்டன்

ஸ்திரீகள் குறைவாக ஆடைகள் அணிந்தால் அதற்கு இரண்டே இரண்டு காரணங்கள்தான் இருக்க வேண்டும். ஒன்று அவர்கள் பரம ஏழைகளாக இருக்க வேண்டும். அல்லது பெரிய பணக்காரர்களாக இருக்க வேண்டும்.

—நியூயார்க் நீதிபதி

காணமற்போன பண்டம்

சிப்பாய்கள் தங்களுடைய துணிமணிகளை யெல்லாம் கெட்டுப்போகாமல் வைத்திருக்கிறார்களா வென்று பரிசோதிக்கும் தினம். எல்லாச் சிப்பாய்களும் வரிசை வரிசையாக நின்று கொண்டிருக்கிறார்கள். பெரிய துரையும் இன்னும் இரண்டு துரைகளும், ஒவ்வொரு சிப்பாயாகக் கேள்வி கேட்டுக்கொண்டு வருகிறார்கள். கடைசியாக ஒரு சிப்பாயிடம் வந்ததும், பெரிய துரை அவனைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்.

"உனக்கு எத்தனை சட்டைகள் ?"

"மூன்று. ஒன்று போட்டுக்கொண் டிருக்கிறேன். ஒன்று சலவைக்குப் போயிருக்கிறது. ஒன்று பெட்டியில் இருக்கிறது."

"உனக்கு எத்தனை ஜதை பூட்ஸ்கள் ?"

"இரண்டு. ஒன்று போட்டுக் கொண்டிருக்கிறேன். ஒன்று பெட்டியில் இருக்கிறது."

"எத்தனை ஜதை மேஜோடுகள் ?"

"இரண்டு. ஒன்று போட்டுக் கொண்டிருக்கிறேன். ஒன்று பெட்டியில் இருக்கிறது."

"எத்தனை கால் சட்டைகள் ?"

"மூன்று. ஒன்று போட்டுக் கொண்டிருக்கிறேன். ஒன்று சலவைக்குப் போயிருக்கிறது. ஒன்று பெட்டியில் இருக்கிறது."

"சரி. உன்னுடைய பெட்டி எங்கே ?"

"**பெட்டியைத்தான் காணோம் !**"

எலும்புத்துண்டு

நீக்ரோக்களை விடுவிக்கும் விஷயமாக அமெரிக்காவில் உள்ள வெள்ளையர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டார்கள் அல்லவா? அப்பொழுது ஒரு வெள்ளையர் ஒரு நீக்ரோவைப் பார்த்து, "உங்களுக்காக நாங்கள் போட்டுக் கொள்ளும் இந்தச் சண்டையில் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?" என்று கேட்டார். அதற்கு அந்த நீக்ரோ, "நாய்கள் எலும்புத் துண்டுக்காகச் சண்டை போட்டுக்கொள்ளும்போது எலும்புத் துண்டும் சண்டையில் கலந்துகொள்ளுமா?" என்று கேட்டார்.

பாவமோரிடம், பழியோரிடம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஒவ்வொரு அரசிளங்குமரனுடன் கூடவே ஒரு பையனும் வளர்க்கப்படுவான். அரசிளங்குமரன் செய்யும் தப்பிதத்துக்கெல்லாம் பையன் தண்டிக்கப் படுவான்!

ஒரு நாள்

மழை 'சோ' வென்று கொட்டிக் கொண்டிருந்தது. ராம்லால் கிருஷ்ண லால் ஜவுளிக் கடையில் ஒரு மனிதர் தம் எட்டு வயதுள்ள பைய

னுடன் சொட்டச் சொட்ட உள்ளே நுழைந்தார். இவரைக் கண்டதும் கடை சிப்பந்தியின் முகம் மலர்ந்தது. "வாங்கோ ஸார், வாங்கோ ஸார்! உங்களுக்கு என்ன வேண்டும்? ஷர்ட்டிங், கோட்டிங்......."

"ஏதாவது சட்டை தினுசுகள்தான் எடுங்களேன், பார்க்கலாம்!" என்றார் வந்த மனிதர்.

அவ்வளவுதான், கண்ணாடி அலமாரிகளில் இருந்த துணி வகைகளை யெல்லாம் மேஜைமீது குவித்தார் சிப்பந்தி. "இந்தாங்கோ. இது வேணுமா பாருங்கோ! கஜம் 14 அணா தான், ரொம்ப அழுத்தமா யிருக்கும்" என்றான் சிப்பந்தி.

"இல்லாவிடில் இதைப் பாருங்கோ. கஜம் 15 அணா. சாயம் போகாது. துணி கிழியாது. இதைத்தான் இப்பொழுது எல்லாரும் வாங்கிக் கொண்டு போகிறார்கள். எத்தனை கஜம் கிழிக்கட்டும்! இது பிடிக்காவிட்டால் இதை வேண்டுமானால் பாருங்கோ. கஜம் ரூ. 1-2-0. போட்டுக் கொள்ள வெகு நைஸா யிருக்கும்" என்று மேலே சிப்பந்தி சொல்லிக்கொண்டே போனார்.

இந்த மாதிரி கடை சிப்பந்தி ஒவ்வொரு தினுசாகக் காட்டிக்கொண்டு போனார். ஆனால் கடைக்கு வந்தவர் ஒன்றும் பேசவில்லை. ஒவ்வொன்றுக்கும் "த்ஸோ, த்ஸோ" என்று மாத்திரம் சூக் கொட்டிக்கொண்டே யிருந்தார்.

கடைசியில் சிப்பந்தி கடையிலுள்ள எல்லா ஷர்ட் தினுசுகளையும் காண்பித்த பிறகு "ஏதாவது கோட்டு தினுசுகள் வேணுமானல் காண்பிக்கட்டுமா?" என்ருர்.

இந்த சமயத்தில் கடைக்குள் நுழைந்தவர் தம் பையனை ரகசியமாகக் கூப்பிட்டு, "அம்பி! போய் மழை நின்றுவிட்டதா என்று பார்த்துவிட்டு வா. இல்லையானல் கோட்டு தினுசுகளையும் பார்த்து வைக்கலாமே!" என்ருர்.

இது கடைக்காரர் காதில் விழுந்துவிட்டது. கடைக்காரருக்கு எப்படி இருக்கும்?

வதந்தி

காலை பொழுது விடிந்ததும் நடக்கும் ஒரு சமாசாரத்தை ஒவ்வொருவரும் 12 நிமிஷத்துக்குள் இன்னும் இரண்டு பேரிடம் சொல்வார்களானல், மத்தியானம் 12 மணிக்குள் இந்த சமாசாரம் உலகம் முழுவதும் பரவிவிடும்.

கம்பௌண்டர்

ஊரிலிருந்து வந்த ஆங்கிலக் கடிதத்தைப் படிப்பதற்கு அவர் எவ்வளவு முயன்றும் முடியவில்லை. எழுத்து அத்தனை கிறுக்கலாயிருந்தது. கடைசியில் அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. எத்தனை கிறுக்கலாய் இருந்தாலும் வைத்தியர்கள்

எழுத்துக்குமேல் கிறுக்கலாய் இருக்கமுடியாது. அதையே கம்பௌண்டர்கள் படித்துப் புரிந்து கொள்ளும் போது இதைப் படித்துச் சொல்ல மாட்டாரா என்று கடிதத்தைப் பக்கத்தில் இருந்த ஒரு கம்பௌண்டருக்கு தம் வேலைக்காரன் மூலம் கொடுத் தனுப்பினர். கொஞ்ச நாழிக்கெல்லாம் வேலைக்காரன் திரும்பி வந்தான்.

"கம்பௌண்டர் என்னடா சொன்னர்?" என்று அவர் விசாரித்தார்.

"இந்த மருந்தைக் கொடுத் தனுப்பினர்" என்று வேலைக்காரன் ஒரு மருந்துப் புட்டியை நீட்டினன்!

அரேபியாவில்

அரேபியாவில் ஒரு பணக்கார யூத வர்த்தகன் இருந்தான். அவன் சொத்தை எப்படியாவது பிடுங்கிக் கொள்ளவேண்டுமென்று அந்த நாட்டு பாதுஷாவுக்கு ஆசை. அதற்காக அந்த யூதனைக் கூப்பிட்டு அனுப்பி ஒரு சிக்கலான கேள்வி கேட்டார்.

"முகம்மதிய மதம், யூத மதம், கிறிஸ்தவ மதம், இம் மூன்றினும் எது சிறந்தது?" என்று கேட்டார்.

முகம்மதிய மதம் சிறந்தது என்று பதில் சொன்னல், முகம்மதியனக மாறு என்று சொல்வது, மற்ற இரு மதங்களில் ஏதாவதொன்றைச்

சிறந்தது என்று சொன்னால், ஏன் முகம்மதிய மதத்தை இழிவுபடுத்தினாய் என்று சிறையிலிடுவது என்று பாதுஷா தீர்மானித்து வைத்திருந்தார்.

ஆனால் யூத வர்த்தகன் சாமர்த்தியசாலியாதலால் பின்வருமாறு பதில் அளித்தான்.

"ஒரு ஊரில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். அவனிடம் விலை மதிக்க முடியாத ரத்தினக் கல் ஒன்று இருந்தது. தனக்குப் பிள்ளைகளோ மூன்று, கல்லோ ஒன்று. என்ன பண்ணுவது என்று அவன் யோசித்தான்.

ஒரு சிறந்த இரத்தின வியாபாரியிடம் தன்னிடம் இருக்கும் இரத்தினக் கல்லைப் போலவே வேறு இரண்டு போலிக் கற்களை இரகசியமாக வாங்கி வைத்தான்.

தன் அந்திய காலம் நெருங்கிய உடன் ஒவ்வொரு பிள்ளையையும் தனித் தனியே வரவழைத்து ஒவ்வொரு ரத்தினக் கல்லைக் கொடுத்து, 'நான் உன்னிடம்தான் இந்த ரத்தினக் கல்லை ஒப்புவிக்கிறேன். இதை நான் உன்னிடம் கொடுத்திருப்பதாக மற்றவர்களிடம் தெரிவியாதே!' என்று சொல்லி விட்டுத் தனக்குப் பிடித்தமான பிள்ளையிடமே அந்த உண்மையான ரத்தினக் கல்லைக் கொடுத்துவிட்டு இறந்து போனான். ஒவ்வொரு பிள்ளையும் தன்னிடம் இருப்பதுதான் உண்மையான இரத்தினக் கல் என்று நினைத்து மூவரும் ரொம்பவும் அன்னியோன்யமாக வாழ்ந்துவந்தனர்.

அதுபோல அவரவர் தங்கள் தங்கள் மதந்தான் உண்மையான மதம் என்று நினைத்துக்கொள்ளலாம். ஆனல், உண்மையான மதம் எது என்பது, மேற்படி பணக்காரனைப்போல், அவற்றை உண்டு பண்ணிய தெய்வத்திற்குத்தான் தெரியும்."

பூதனின் பதிலைக் கேட்ட பாதுஷா அவனுடைய புத்தி சாதுர்யத்திற்கு மெச்சி நிறையச் சன்மானம் கொடுத்து அனுப்பினர்.

டாக்டர் அருண்டேல்

காலஞ்சென்ற டாக்டர் அருண்டேல் ஒரு சமயம் காசி மத்திய ஹிந்து கலாசாலையில் பிரபஸராக வேலை பார்த்துவந்தார். ஒருநாள் கலாசாலை டைரக்டர்கள் எல்லாரும் ஒன்றுகூடி, அவர் பிரபஸராக இருக்க யோக்கியதை உள்ளவரா, அல்லவா என்று ஆராயத் தொடங்கினர்களாம். கடைசியில் அவர் பிரபஸராக இருக்க யோக்கியதை இல்லை என்று தீர்மானித்து அவரை அக் கலாசாலையின் பிரின்ஸ்பாலாக மாற்றினர்கள். டாக்டர் அருண்டேலே தம்மைப்பற்றி இப்படி வேடிக்கையாகக் கூறியுள்ளார்.

ஏழையா, பணக்காரனு?

ஒருவன் ஏழையா, பணக்காரனு என்பதை அவன் சம்பாத்தியத்தைக் கொண்டு சொல்ல

முடியாது. அவன் வரவுக்கும், செலவுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கொண்டுதான் சொல்ல முடியும்.

யார் பணக்காரன்?

குறைவாகச் சம்பாதித்து அதைவிடக் குறைவாகச் செலவழிக்கிறவன், நிறைய சம்பாதித்து, அதைவிட நிறைய செலவழிக்கிறவனைவிட பணக்காரன்.

மழையும், குடையும்

மழை பெய்வதற்குமுன், குடையைப் பிரிப்பது எப்படியோ, அப்படித்தான் கஷ்டம் வரும்முன் மனதை அலட்டிக்கொள்வது.

சமய சஞ்சீவி

மோட்டார் வண்டிகளிலும், மோட்டார் சைக்கிள்களிலும், முன் விளக்கோ, அல்லது பின் விளக்கோ எரியாவிட்டால் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு விடுவார்கள். ஆனால் எப்பொழுது பார்த்தாலும் விளக்குகள் சரியாக இருக்கும் என்று சொல்ல முடியுமா? எப்பொழுதாவது நம்மை அறியாமல் ஏதாவது பழுது ஏற்படத்தான் செய்யும். அதுவும் நல்ல சமயத்தில், பழுதாகி, நம்மைப் போலீஸ்காரர்களிடம் சிக்கவைக்க வைத்துவிடும்.

இந்த சமயத்தில், யாராவது சமய சஞ்சீவியாக வந்து விளக்கைப் பழுது பார்த்துக் கொடுத்தால் நாம் எவ்வளவு திருப்தியாக இருப்போம்?

அமெரிக்காவில் ஒரு யுவர் இந்த வேலையைத் தான் செய்து தன் வாழ்க்கையை நடத்திவருகிறார். மெக்கானிக் உடை உடுத்தி, ஒரு மோட்டார் சைக்கிளில் அவர் சவாரி செய்கிறார். விளக்கு எரியாமல் வரும் கார் வந்தால், உடனே சைகை காட்டி அதை நிறுத்துகிறார். விளக்கு எரியவில்லையென்றும், தாம் ஒரு நொடியில் சரி பார்ப்பதாகவும் சொல்கிறார். போலீஸ்காரனிடமிருந்து தப்பவைத்தாரே என்று மோட்டார்க்காரர்கள் அவரிடம் பழுது பார்த்துக் கொள்கிறார்கள்.

மூன்று விதம்

பொய்களில் மூன்று விதம் - பொய்கள், அபாண்டப் பொய்கள், புள்ளி விவரங்கள்.

ஆறு உபாத்தியாயர்கள்

எனக்கு ஆறு உபாத்தியாயர்கள் இருந்தார்கள். எனக்கு எல்லா விஷயங்களும் அவர்கள் தான் சொல்லிக் கொடுத்தார்கள். அவர்கள் பெயர்களாவன:—எங்கே, என்ன, எப்பொழுது, ஏன், எப்படி, யார்.

—கிப்ளிங்.

உழைப்பும், ஊதியமும்

ஊதியத்திற்குமேல் உழைக்காதவர்கள், உழைப்புக்குமேல் ஊதியம் பெறுவதில்லை.

சொல்லும், அம்பும்

வாயிலிருந்து கிளம்பும் சொல்லும், கையிலிருந்து கிளம்பும் அம்பும் ஒரு நாளும் திரும்புவதில்லை.

ஆபத்தில் உதவி

வாழ்க்கையில் நண்பர்கள் ஆபத்துக்கு உதவுகிறார்களோ, இல்லையோ ஹாலிவுட் நடிகர்களுக்கு ஆபத்தில் உதவுவதற்கென்றே சில நண்பர்கள் இருக்கிறார்கள். ஹாலிவுட் நடிகர்கள் படப் பிடிப்பின்போது மோட்டார் விபத்து, மாடிப் படியிலிருந்து கீழே உருண்டு விழுதல் முதலிய பல ஆபத்துக்களில் சிக்கிக் கொள்ளவேண்டியிருக்கிறதல்லவா? இந்த சங்கடங்களில் இவர்கள் நிஜமாகவே அகப்பட்டுக் கொண்டால் பின்னல் படம் முடிவது ஏது! அதற்காக, இத்தகைய காட்சிகளில் இந்த நண்பர்கள் இவர்களுக்குப் பதில் நடிப்பார்கள். அதற்காக அவர்கள் வாங்கும் கட்டணம் பின்வருமாறு :-

படியில் உருண்டு விழ	20 பவுன்.
கல் படியில் உருண்டு விழ	30 பவுன்.
கார் உருண்டு விழ	15 பவுன்.
காரை மோத	100 பவுன்.

விவேகம்

உலகத்தில் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களில் கோடியில் ஒரு பங்குகூட நாம் தெரிந்து கொள்ளமுடியாது என்று தெரிந்து கொள்வது தான் விவேகம்.

நல்லோரும், தீயோரும்

மிருகங்களைக் கொல்லுவதற்கு முன் கொழுக்க வைக்கிறார்கள். நோயாளிகளை சொஸ்தப்படுத்துவதற்கு முன் பட்டினி போடுகிறார்கள். அதைப் போலத்தான் தீயவர்கள் அழிவதற்கு முன் சுகப் படுகிறார்கள். நல்லவர்கள் சுகப்படு முன் கஷ்டப் படுகிறார்கள்.

தேவலோகத்தில்

மனிதன் இறந்ததும் என்ன சொத்து வைத்து விட்டுச் சென்றிருக்கிறான் என்று பூலோகத்தில் விசாரிக்கிறார்கள். ஆனால் தேவலோகத்தில் அவன் எவ்வளவு புண்ணியம் செய்திருக்கிறான் என்று கவனிக்கிறார்கள்.

ஓ. ஹென்றி

அமெரிக்க ஆசிரியரான ஓ. ஹென்றி சிறு கதைகள் எழுதுவதில் வெகு கெட்டிக்காரர். அவர் கதைகளுக்கு அதிகக் கிராக்கி இருந்தபடியால் எல்லாப் பத்திரிகாசிரியர்களும் அவருக்கு முன் பணம் கொடுத்துவிட்டு, பின்னால் கதைகள் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் ஓ. ஹென்றி ஒரு ஆசிரிய ரிடம் பணம் வாங்கிவிட்டு, இன்னொரு ஆசிரியரிடம் கதையைக் கொடுத்துவிடுவார்.

ஒரு சமயம் ஓ. ஹென்றி தம் கதை ஒன்றைத் தம் நண்பர் ஒருவரிடம் கொடுத்து விற்றுக்கொடுக் கும்படி சொன்னார். நண்பர் எத்தனையோ பத்திரிகா சிரியர்களைப் போய்ப் பார்த்தார். எல்லாரும் ஒரு முகமாக, ஓ. ஹென்றி எங்களுக்கு இன்னும் நான்கு கதைகள் தரவேண்டும், இன்னும் ஐந்து கதைகள் தரவேண்டும் என்று சொல்லி, புதுக் கதையைப் பணத்துக்கு எடுத்துக்கொள்ள மறுத்து விட்டார்கள்.

இது விஷயத்தை நண்பர் ஓ. ஹென்றிக்கு 'போன்' பண்ணினார். அதற்கு ஓ. ஹென்றி "பரவா யில்லை. கவலைப்படாதீர்கள். அந்தக் கதையை நான் இன்னொரு பத்திரிகாசிரியருக்கு விற்றுவிட்டேன்" என்று போனில் பதில் அளித்தார்.

மூட ஜனங்கள்

ஒரு சோடாக் கடைக்காரன் பத்திரிகை விற்றுக்கொண்டிருந்தான். பத்திரிகை ஒன்று 2 அணு என்று விளம்பரப்படுத்திப் பார்த்தான். வியாபாரம் நடக்கவில்லை. கலர் ஒன்று 2 அணு என்று விளம்பரப் படுத்திப் பார்த்தான். அப்பொழுதும் வியாபாரம் நடக்கவில்லை. கடைசியில் அவன் ஒரு யுக்தி பண்ணினன். "கலர் 4 அணு. கலர் குடிக்கிறவர்களுக்கு ஒரு பத்திரிகை இனும்" என்று விளம்பரப்படுத்தினன். ஜனங்கள் விழுந்தடித்துக் கொண்டு கலர் வாங்கிக் குடித்துவிட்டு, பத்திரிகையையும் வாங்கிக்கொண்டு சென்ருர்கள்.

மடிமை

மடிமை வெகு மெள்ள நடக்கிறது. வறுமை அதை வெகு சீக்கிரம் எட்டிப் பிடித்துவிடுகிறது.

கஷ்டம்

பொருள் சம்பாதிப்பது கஷ்டம். அதை வைத்துக் காப்பாற்றுவது அதைவிடக் கஷ்டம். அதை நல்ல வழியில் செலவழிப்பதோ, மிக, மிகக் கஷ்டம்.

அசிகை வேண்டாம்!

பொருள் சம்பாதித்தவர்களைக் கண்டு நாம் அசிகைப் படவேண்டாம். பொருளைவிட மிக விலை

உயர்ந்த பொருள்களான தேக ஆரோக்யம், மன நிம்மதி, கண்யம், மனச்சாட்சி இவை எல்லாவற்றை யும் விற்று அல்லவா அவர்கள் பொருள் சம்பா திக்கிறார்கள்?

சிநேகம்

தீயவர்களின் சிநேகம் காலை நிழல்போல் தேய்ந்துகொண்டே வரும். நல்லவர்களின் சிநேகம் மாலை நிழல்போல் நீண்டுகொண்டே போகும்.

தைரியம்

தீபத்தைத் தலைகீழாகத் திருப்பினாலும் ஜ்வாலை மேலேதான் போகும். அதைப்போல தைரியசாலி களின் மனதை எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அசைக்க முடியாது.

எழுத்தாளர்

சில எழுத்தாளர்கள் ஒண்ணேமுக்காலே யரைக்கால் புத்தகம் எழுதியானதும் ஆகாசத்தை அண்ணாந்து பார்க்கத் தொடங்கிவிடுகிறார்கள். தங்க ளுக்கு மிஞ்சின எழுத்தாளர்கள் உலகத்தில் யாருமே இல்லை என்று மார் தட்டத் தொடங்கி விடுகிறார்கள். தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று காட்டிக் கொள்வதற்காக, மற்ற எழுத்தாளர்களைக் குறிப்பிட்டு, "அவனுக்கு என்ன தெரியும்?"

"இவனுக்கு என்ன தெரியும்?" என்று கேட்கத் தொடங்கிவிடுகிறார்கள். ஜார்ஜஸ் சிமினன் என்னும் பிரஞ்சு ஆசிரியர் எத்தனை புத்தகங்கள் எழுதியுள்ளார் என்று இவர்கள் கேள்விப்பட்டார்களானல் தலை கவிழ்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. தம்முடைய நாற்பத்தைந்தாவது வயதுக்குள் இவர் இருநூறு புத்தகங்கள் எழுதிக் குவித்துவிட்டாராம்! எவ்வளவுக் கெவ்வளவு நிறைய எழுதுகிறரோ, அவ்வளவுக்கவ்வளவு நன்கும் எழுதுகிறாராம்.

குதிரையும், மாடும்

நாம் தினம் எத்தனையோ குதிரைகளைப் பார்க்கிறோம், மாடுகளையும் பார்க்கிறோம். ஆனல் அவை படுத்த நிலையிலிருந்து எழுந்து நிற்கும்போது எந்தக் கால்களை முன்னல் ஊன்றிக்கொள்கின்றன என்று கவனித்திருக்கிறோமா? இது விஷயத்தைக் கவனித்தால் ஒரு வேடிக்கை புலப்படும். குதிரைக்கும், மாட்டுக்கும் ஒரு வித்தியாசம் தென்படும். குதிரைகள் பின்னங்கால்களை ஊன்றிக்கொண்டு முன்னங்கால்களால் எழுந்து நிற்கும். மாடுகள் முன்னங்கால்களை ஊன்றிக்கொண்டு பின்னங்கால்களால் எழுந்திருக்கும்.

பட்டுப் பூச்சி

ஒரு பட்டுப் பூச்சி ஆயிரம் கஜம் நீளமுள்ள பட்டு நூல் கொடுக்கும்.

அழிவு

துர்மந்திரியால் ராஜனும், உலக சகவாசத்தால் சன்யாசியும், செல்லம் கொடுப்பதனுல் பிள்ளையும், அத்யயனம் இல்லாமல் பிராமணனும், துஷ்டப் பிள்ளைகளால் குலமும், நீசர்களின் சகவாசத்தால் நற்குணமும், குடியினுல் மானமும், அசிரத்தையால் பயிர்களும், பிரிவினுல் அன்பும், பராமுகமாய் இருப்பதால் சிநேகமும், அநியாயத்தினுல் சுபிட்சமும், கண்மூடித்தனமான செலவினுல் தனமும் அழிகின்றன.

பசுவும், கன்றும்

பூமி என்கிற பசுவிலிருந்து அரசன் பால் கறக்க விரும்பினுல், ஜனங்கள் என்கிற கன்றுக் கட்டியை நன்கு போஷிக்கவேண்டும்.

வீரனும், கொலையாளியும்

ஒருவனைக் கொன்ருல் கொலையாளி. ஆயிரக் கணக்கில் கொன்ருல் வீரன்.

சிங்கமும், குரங்கும்

எஸ். எஸ். எல். ஸி பரீட்சை தேறின ஒரு பையனுக்கு வேலை கிடைக்கவில்லை. அதற்காக ஒரு சர்க்கஸ் கம்பெனிக்காரரைப் பார்த்து வேலை கேட்டான். அவர் சொன்னார்: "அப்பா! என்னிடம் தற்சமயம் ஒரு குமாஸ்தா வேலையும் காலி கிடையாது. என்னிடம் வேடிக்கை வேடிக்கையாக வித்தை செய்யும் ஒரு குரங்கு இருந்தது. அது சமீபத்தில் இறந்துவிட்டது. அதன் தோலை எடுத்து வைத்திருக்கிறேன். அதன் தோலை வேண்டுமானால் நீ போர்த்திக்கொண்டு குரங்குமாதிரி ஆடு. சம்மதமிருந்தால் சொல்லு. இதைத் தவிர தற்சமயம் என்னிடம் வேறு ஒரு வேலையும் காலி கிடையாது" என்றார்.

எஸ். எஸ். எல். ஸி. தேறின அந்தப் பையன் வேறு வழியின்றி வேலையை ஒப்புக்கொண்டான். அன்றிலிருந்து குரங்குத் தோலைப் போர்த்திக் கொண்டு குரங்குபோல் நடிக்கவும் தொடங்கினான்.

ஒருநாள் இவன் உயரத்தில், கம்பியில் தொங்கிக்கொண் டிருந்தபோது அகஸ்மாத்தாகக் கீழே இருந்த சிங்கக்கூண்டில் விழுந்துவிட்டான். 'ஆ' என்று வாயைத் திறந்துகொண்டு பக்கத்தில் நின்றுகொண்டிருந்த சிங்கத்தைக் கண்டதும் பையன் நடுங்கிவிட்டான். வாய் குளறவும் ஆரம்பித்துவிட்டான்.

இதைப் பார்த்து சிங்கம், "அப்பா! கவலைப் படாதே. நீ எப்படி நிஜக் குரங்கு அல்லவோ, அதைப்போல நான் நிஜ சிங்கம் அல்ல. நான் பீ. ஏ. பாஸ் பண்ணிவிட்டு வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருந்த சமயத்தில் இந்த வேலை கிடைத்தது. ஒப்புக்கொண்டேன்" என்று சொல்லிற்று!

பணம்

பணத்துக்கு நாம் அதிக மதிப்புக் கொடுக்கிறோமே யொழிய, கடவுள் அதற்கு மதிப்பே கொடுத்ததாகத் தெரியவில்லை. இல்லாவிடில் அவர் அதை தகுதியில்லாதவர்களிடமும், தீயவர்களிடமும் விட்டுவைப்பாரா?

மனிதர்கள் மூன்று விதம்

மனிதர்களில் மூன்று விதம் உண்டு. நீசர்கள் பின்னால் வரப்போகும் கஷ்டங்களுக்குப் பயந்து ஒரு காரியத்தையும் ஆரம்பித்து வைக்கமாட்டார்கள். மத்திமர்கள் காரியத்தை ஆரம்பித்துவைத்து, இடுக்கண் வந்ததும் கைவிட்டு விடுவார்கள். உத்தமர்கள், தாங்கள் ஆரம்பித்துவைத்த காரியத்தை, எவ்வளவு இடுக்கண்கள் நேர்ந்தாலும் பொருட்படுத்தாமல் முடித்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார்கள்.

தந்தியும், தபாலும்

ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குத் தகவல் அனுப்புவதற்கு நாம் தந்தி, தபால் என்று இரண்டு சாதனங்கள் வைத்திருக்கிறோம். தபால் என்றால் நாம் அனுப்பும் கடிதமே நேரில் குறிப்பிட்ட இடத்துக்குப் போய்ச் சேர்கிறது. தந்தி என்றால், நேரிடை ஒரு வஸ்துவும் போய்ச் சேர்வதில்லை. இங்குள்ள ஒரு மின்சார சக்தி தான் அங்கு போய்ச் சேர்கிறது; அந்த சக்தியைக் கொண்டு தகவல் தெரிந்துகொள்கிறார்கள்.

இதைப்போலவே நம் உடலிலும் தந்தி, தபால் என்று இரண்டுவித இலாக்காக்கள் இருக்கின்றன. நம்முடைய நரம்புகள்தான் தந்தி இலாகா வேலையைச் செய்கின்றன. நம்மை அறியாமல் நம் கை நெருப்பில் பட்டுவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே நம் கை நம்மை அறியாமல் தானாகவே சடாரென்று பின்வாங்கிக் கொள்கிறது. இத்தகைய காரியங்களை மூளை உத்தரவு கொடுத்துத் தான் செய்யவேண்டும் என்று அவயவங்கள் காத்திருப்பதில்லை.

நல்ல சாப்பாட்டைக் கண்டதும் நாக்கில் ஜலம் ஊறுகிறது. அதாவது சாப்பாட்டை ஜீரணிப்பதற்குத் தயாராக உமிழ் நீர் ஊறுகிறது. அப்படியே வயிற்றிலும், உணவை ஜீரணிப்பதற்கு மூன்று திராவங்கள் தயாராக இருக்கின்றன. இந்தத்

திராகவங்களைத் தயார்ப்படுத்தி வைப்பது "ஹார் மோன்ஸ்" என்னும் ஒரு வஸ்துவாகும். இவை தபால் இலாகா வேலையைச் செய்கின்றன. "சாப்பாடு வருகிறது, தயாராக இருங்கள்" என்னும் விஷயத்தை இவை உடல் முழுவதும் நேரில்போய்த் தெரிவிக்கின்றன.

ஸ்காட்லாந்து வாசிகள்

ஸ்காட்லாந்து வாசிகள் மிகவும் செட்டுத்தனம் வாய்ந்தவர்கள் என்பதைக்காட்டும் ஒரு வேடிக்கைக் குறிப்பு.

ஒரு பெரியவரின் பிறந்த நாளை யொட்டி, உலகத்தின் எல்லாப் பாகங்களிலிருந்தும் வாழ்த்துக் கடிதங்கள் வந்து குவிந்தனவாம். ஸ்காட்லாந்தி லிருந்துமட்டும் ஒரே ஒரு கார்டு மாத்திரம் வந்ததாம்.

மோட்டார்

ஒரு நாட்டுப்புறத்தான் தன்னுடைய நண்ப னுடைய காரில் பிரயாணம் செய்தான். நண்பன் தன்னுடைய மோட்டார்க்கார் பெருமையைக் காட் டிக்கொள்வதற்காக மோட்டாரை வெகு வேகமாக ஓட்டிச்சென்றான். கடைசியில் கார் ஒரு மரத்தில் மோதிக்கொள்ளவே கார் நின்றது. இரண்டுபேரும் காரிலிருந்து வெளியே விழுந்தார்கள். நல்ல வேளை யாகக் காயம் படவில்லை.

நாட்டுப்புறத்தான் தன் நண்பனைப்பார்த்து, "எல்லாம் சரிதான். ஆனால் மரம் இல்லாத இடத்தில் காரை எப்படி நிறுத்துவது?" என்று கேட்டான்.

தூக்கம்

மனைவி : ஏன் தூங்கும்போது பேசுகிறீர்கள்?
புருஷன் : பின் வேறு எப்பொழுதுதான் நீ என்னைப் பேசவிடுகிறாய்?

மெடல்

"இந்த மெடல் உனக்கு எப்படிக் கிடைத்தது?"
"ஹாஸ்டல் மாணவர்கள் அத்தனைபேர் உயிரையும் நான் காப்பாற்றினதற்காகக் கிடைத்தது".
"எப்படிக் காப்பாற்றினாய்?"
"ஹாஸ்டல் சமையற்காரரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினேன்".

மர்மம்

"நான் ஒரு மர்மக்கதை எழுதிக்கொண்டிருக்கிறேன்."
"அது எந்தப் பத்திரிகையில் வெளிவரப் போகிறது?"
"அதுதான் மர்மமாய் இருக்கிறது".

நூற்றுக்கு ஒண்ணு

நோயாளி: டாக்டர்! நான் இந்த வியாதியிலிருந்து பிழைப்பேனா?

டாக்டர்: கட்டாயம் பிழைப்பீர்.

நோயாளி: உங்களால் அவ்வளவு நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்?

டாக்டர்: இந்தமாதிரி வியாதி வந்தால் நூற்றில் ஒருவர்தான் பிழைப்பார். இதுவரை இதே வியாதிக்காக என்னிடம் வந்த தொண்ணூற்றொன்பது பேர் இறந்துவிட்டனர். அதனால் தான் அவ்வளவு நிச்சயமாகச் சொன்னேன்.

கல்யாணம்

கல்யாணம் என்பது முற்றுகை இடப்பட்ட ஒரு கோட்டையைப் போன்றது. உள்ளே இருக்கிறவர்கள் வெளியே வர விரும்புகிறார்கள். வெளியே இருக்கிறவர்கள் உள்ளே நுழையப் பார்க்கிறார்கள்.

கைம்மாறு

மிகக் கடுமையான வியாதியிலிருந்து தம் குழந்தையைக் காப்பாற்றிய டாக்டரை, குழந்தையின் தகப்பனார் பார்க்க வந்தார். "தாங்கள் செய்த பேருபகாரத்துக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்! என் ஞாபகமாக இந்த அழகிய தோல் பையை வைத்துக்கொள்ளுங்கள்.

அதன்மேல் உங்கள் பெயர் எழுதப்பட்டிருக்கிறது" என்று ஒரு அழகிய தோல் பையை டாக்டரிடம் கொடுத்தார்.

டாக்டர், அந்தப் பையை வாங்க மறுத்து, "ரொம்ப அழகாக இருக்கிறது! ஒரு ரூபாய் கூட பெருத இந்த பைக்காகவா நான் வைத்தியம் பண்ணினேன்? என் பீஸ் நூறு ரூபாய். கீழே வையும்" என்ருர்.

"அப்படியா. சரி. இதோ தருகிறேன்" என்று குழந்தையின் தகப்பனுர் அந்த அழகிய தோல் பையைத் திறந்தார். அதிலிருந்து ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து, ஒன்றை டாக்டரிடம் கொடுத்துவிட்டு, மீதி நான்கு நோட்டுக்களையும், தோல்பையில் வைத்து,தோல்பையைத் தம் சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு வீடுதிரும்பினுர்.

சீனர்கள்

உலகத்தில் உள்ள சீனர்கள் அத்தனைபேரும், நாலு நாலுபேராக அணிவகுத்து, நாளைக்குப் பதினைந்து மைல் வீதம் ஒரு ஊர் வழியாகச் சென்ருர்கள் என்று வைத்துக்கொண்டால், எத்தனை கோடி வருஷங்கள் ஆனுலும் அந்த ஊர் வழியாகச் சீனர்கள் சென்றுகொண்டுதான் இருப்பார்கள். இந்த ரீதியில் சீன மக்கள் அத்தனைபேரும் நடந்து செல்வதற்குக் கிட்டத்தட்ட 25 வருஷங்கள் பிடிக்கு

மாம். இதற்குள் இன்னொரு தலைமுறை வந்துவிடு மாகையால் ஊர் காலியே ஆகாதாம்.

மௌனம்

போலந்தில் ஒருவர் முப்பது வருஷ காலம் மௌனமாக இருந்தாராம். ஒருநாள் இவர் கோபத்தில் மனைவியைக் கடிந்துகொண்டாராம். கொஞ்ச நாளைக்கெல்லாம் மனைவி இறந்துவிடவே இவர் பச்சாத்தாபப்பட்டு சாகும்வரை பேசவே இல்லையாம்.

குசேலர் தோற்றார்

நம் நாட்டில், சற்று அதிகப்படியான குழந்தைகள் பிறந்துவிட்டால் குசேலர் என்று கூப்பிட ஆரம்பித்துவிடுவார்கள். ஆனால் குசேலரையும் தோற்கடிக்கக்கூடிய ஒரு தகப்பனார் அமெரிக்காவில் இருந்தாராம்! இவருக்கு 37 குழந்தைகளாம்!

பழைய உடை

அமெரிக்காவில், சேனையிலிருந்து திரும்பிய ஸோல்ஜர்களில் பன்னிரண்டில் ஒருவரால்தான் பழைய உடைகளைப் போட்டுக்கொள்ள முடிந்ததாம். மற்றவர்கள் முன்னைவிட அதிக திடகாத்திரர்களாக மாறி இருந்தபடியால் பழைய உடைகள் "சின்னதாகப் போய்விட்டனவாம்."

இந்தியாவில் இத்தகைய பரிசோதனை செய்து பார்த்ததாகத் தெரியவில்லை. ஆனால் அப்படி செய்ய விரும்பியிருந்தாலும் செய்திருக்க முடியாது. பழைய உடைகள்தான் ஜாடிக்காரனுக்கு அடுத்த நாளே போயிருக்குமே!

எத்தன்

சீமையில் ஒரு பெரிய பணக்காரன் இறந்து போகும்போது தன் சொத்தை, ஒரு ஐரிஷ்காரன், ஒரு ஆங்கிலேயன், ஒரு ஸ்காச்சுக்காரன் இம் மூவருக்கும் சம பங்காகப் பிரித்துக் கொடுத்தான். ஆனால் பணக்காரன் ஒரே ஒரு நிபந்தனைமட்டும் போட்டான். அதாவது மூன்றுபேரும், தலைக்கு பத்து பவுன் தன் சவப்பெட்டியில் வைக்கவேண்டுமென்று. ஐரிஷ்காரனும், ஆங்கிலேயனும் தலைக்கு பத்து பவுன் வைத்தார்கள். ஸ்காச்சுக்காரன் அந்த இருபது பவுனையும் தான் எடுத்துக்கொண்டு, முப்பது பவுனுக்கு ஒரு செக் வைத்தான்.

கொஞ்ச நாள் கழித்துப் பாங்கியில் விசாரித்த போது செக்கை யாரோ மாற்றி பணம் வாங்கிக் கொண்டு போய்விட்டார்கள் என்று தெரிவித்தார்கள். சவப் பெட்டியை அடக்கம் செய்தவன் வெல்ஷ்காரன் என்பதை ஸ்காச்சுக்காரன் மறந்து விட்டான்!

வேசிப் பிழைப்பு

ஒரு பிரபல நாடகாசிரியரை, அவர் எப்படி நாடகாசிரியராக மாறினுர் என்று கேட்டதற்கு அவர் பின்வருமாறு பதில் அளித்தாராம். "ஒரு பெண் எப்படி வேசியாக மாறுகிருளோ, அதே மாதிரிதான் நானும் மாறினேன். முதலில் என் திருப்திக்காக நாடகங்கள் எழுதினேன். பிறகு பிறர் திருப்திக்காக எழுதினேன். இப்பொழுது பணத்துக்காக எழுதுகிறேன்".

தாத்தா

பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயரைப் பார்த்து ஒரு கிழவர், தாம் தம் பேரப்பையனைப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தார். "இங்கு உட்காருங்கள். இதோ வேலைக்காரனை விட்டு வரவழைக்கிறேன்" என்று தலைமை உபாத்தியாயர் வேலைக்காரனை அனுப்பினுர். கொஞ்ச நாழிக்கெல்லாம் வேலைக்காரன் திரும்பி வந்தான். "என்னங்க! அந்தப்பையனுடைய தாத்தா செத்துப் போய்விட்டாராம். அதற்காகப் பையன் வரவில்லையாம்" என்று சொன்னுன்.

டாக்டர்

சாலை வழியாக வெகு வேகமாக மோட்டார் ஓட்டிக்கொண்டுவந்த ஒருவர் வழியில் ஒருவர்மீது

மோதிவிட்டார். வேடிக்கை பார்க்க கூட்டம் கூடி விட்டது. மோட்டார் ஓட்டிக்கோ ஆத்திரம் தாங்க வில்லை. "எதற்காக அப்படிக் கூட்டம் போடு கிறீர்கள்? யாராவது ஒருவர் போய் வைத்தியரை அழைத்து வாங்களேன்" என்றார். "அடிபட்டுக் கிடக்கிறாரே, அவர்தான் இந்தப் பக்கத்துக்கு ஒரே வைத்தியர்" என்று அவர்கள் பதில் அளித்தார்கள்.

காரணம்

ஒருநாள் பார்த்தாற்போல் ஒருநாள் தினம் நாழிகழித்து வந்ததற்காக மணியை உபாத்தியாயர் பிரம்பினால் அடித்தார். "நான் உன்னை எதற்காக அடித்தேன், சொல்லு" என்று கேட்டார். "முதலில் என்னைத் திட்டினீர்கள், பிறகு என்னை அடித்தீர் கள். இப்பொழுது உங்களுக்கே எதற்காகச் செய் தோம் என்று தெரியவில்லை! ரொம்ப அழகாய் இருக்கிறது!" என்றான் மணி.

குமாஸ்தா வேலை

குமாஸ்தா வேலைக்காக ஒரு மனுஷன் திரும்ப வும் திரும்பவும் மானேஜரைப் பார்த்து தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருந்தான். ஒருநாள் மானேஜருக்கு இது சகிக்கவில்லை. ஒருநாள் தம் முடைய குமாஸ்தாவைக் கூப்பிட்டு அனுப்பினார்.

"தினம் அந்த ஆள் வந்து என் கழுத்தை அறுக்கிறானே, எதற்காக என்று தெரியுமா?"

" குமாஸ்தா வேலைக்குத்தான் ".

" இன்னொரு தடவை அவன் வந்து என் கழுத்தை அறுத்தானே, உம் வேலையை அவனுக்குப் பிடுங்கிக் கொடுத்துவிடுவேன் ".

அவ்வளவுதான்! புது ஆள் தொந்தரவு நின்றது.

பிச்சைக்காரர்கள்

பாரிஸ் நகரத்தில் பிச்சைக்காரர்களுக்கென்றே ஒரு தனி பத்திரிகை இருக்கிறதாம்.

உங்களால் முடியுமா?

ஒரு பிரபு ஒரு பிச்சைக்காரனைப் பார்த்து " உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கேள். தருகிறேன் " என்றார். பிச்சைக்காரன், " எனக்கு பணம் வேண்டாம். அரிசி கொடுத்தால் போதும் " என்றான். " எவ்வளவு அரிசி வேண்டுமானாலும் கேள். தருகிறேன் " என்றார் பிரபு.

" ரொம்ப நிறையக்கூட வேண்டாம். இன்றைக்கு ஒரு தானியம், நாளைக்கு இரண்டு தானியம், அதற்கு அடுத்தநாள் நான்கு தானியம், என்று இந்த மாதிரி இரட்டித்துக் கொடுத்துக்கொண்டே வந்தால் போதும் " என்றான்.

பிரபுவால் அவனுக்குத் தொடர்ந்து அரிசி கொடுத்திருக்க முடியுமா?

வீட்டு வாடகை

பெர்லினில் ஒரு வீட்டுக்காரி தன் வீட்டில் குடியிருந்தவர்களிட மிருந்து 20 வருஷ காலத்துக்கு வாடகையே வாங்கவில்லையாம். சென்னை வீட்டுக் காரர்கள் கவனிக்க!

ஆசிரியர்

ஒரு கட்டுரையாளர் தாம் அனுப்பிய கதை பிரசுரத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதா என்று விசாரித்து, ஒரு பத்திரிகையின் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார். வெகு நாள் பதிலே வரவில்லை. அதற்காக ஒரு இரண்டாம் கடிதம் எழுதி, அத் துடன் தம் விலாசமிட்ட ஒரு தபால் உறை வைத்து அனுப்பினார். அடுத்த தபாலிலேயே பின்வரும் பதில் வந்தது. "தங்கள் விலாசமிட்ட தபால் உறை கிடைத்தது. பதில் எழுத ஒரு காகிதம் அனுப்பி வைக்கவும்".

அபாண்டப் புளுகு

ஒரு பெரியவர் தெரு வழியே போய்க் கொண் டிருந்தார். வழியில் சிலர் ஏதோ தங்களுக்குள் பேசிக்கொண் டிருந்தார்கள். பெரியவர் என்ன விசேஷம் என்று விசாரித்தார். அவர்களில் ஒருவர் "எங்களுக்குள் யாரால் ரொம்ப பெரிய புளுகு சொல்ல முடியுமோ அவருக்கு பத்து ரூபாய் இனும்

கொடுப்பது என்று எங்களுக்குள் போட்டி இட்டுக் கொண்டு இருக்கிறோம்" என்று சொன்னார். அதைக் கேட்டு பெரியவர் "ஐயோ, பொய் சொல்வது ரொம்பவும் பாவம் ஆச்சே. என் வாழ்க் கையில் நான் இதுவரை ஒருபொய்கூட சொன்னது கிடையாது" என்றார். இதைக் கேட்டதும் கூட் டத்திலுள்ள ஒருவன் "இந்த பத்து ரூபாயை இந்த கிழவருக்குக் கொடுங்கள்" என்றான்.

எலியும் பூனையும்

கடற்படை அதிகாரிகள் தங்கள் கப்பல் ஒன்றில் பூனை ஒன்று வளர்த்து வந்தார்கள். பூனையின் பாலுக்காக வாரம் ஒரு ஷில்லிங் செலவு ஆகிறது என்று சர்க்காருக்கு கணக்கு எழுதி அனுப்பினார்கள். இதைப் பார்த்த சர்க்கார் அதிகாரி பின்வருமாறு எழுதி அனுப்பினார் :-

பூனையின் பால் செலவுக்காக வாரம் ஒரு ஷில்லிங் செலவழிப்பது அனாவசியம். கப்பலில் எலிகள் இல்லாவிட்டால் பூனை அவசியம் இல்லை. எலிகள் இருக்கும் பட்சத்தில் பூனையின் ஆகாரத் தைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

எது முக்கியம் ?

தொழில் அபிவிருத்தி அடைவதற்கு எது முக்கியம் ? 'தொழிலாளிகளா, முதலா, அல்லது

மூளையா' என்று அமெரிக்க கோடீசுவரான ஆண்ருட் கார்னிஜியைக் கேட்டதற்கு அவர் 'முக்காலியில் எந்தக் கால் முக்கியம்' என்று திருப்பிக் கேட்டாராம்.

மறு கலியாணம்

அவன் மனைவி அப்பொழுதுதான் இறந்திருந்தாள். இன்னும் ஈமக் கடன்கள்கூட நடந்தபாடில்லை. அதற்குள் பெண்ணைப் பெற்ற ஒருவன் அவனிடம் ஜாதகம் கேட்டான். அதற்கு அவன் சொன்னான்; "இப்பொழுது கேட்கிறீரே, என் மனைவி காய்ச்சலாகக் கிடந்தபோதே, வேறொருவர் ஜாதகம் வாங்கிக்கொண்டு போய் பெண்ணையும் நிச்சயப்படுத்திவிட்டாரே."

கிடையவே, கிடையாதே

குடி வருகிறவர்: "பழைய வீட்டில் சாக்கடை நாற்றம் பொறுக்காமல்தான் நான் இந்த வீட்டிற்கு குடிவருகிறேன்."

வீட்டுக்காரர்: "அந்த கவலை உங்களுக்கு இனி வேண்டாம். இந்த வீட்டில் சாக்கடையே கிடையாது."

சரியான சமயம்

முதல் வைத்தியர் :- 'அப்பொழுது அந்த நோயாளிக்கு சரியான சமயத்தில்தான் ஆப்பரேஷன் செய்தீர் என்று சொல்லும்.'

இரண்டாம் வைத்தியர்:- "ஆம் இன்னும் ஒரு மணி நேரம் பொறுத்திருந்தால் நோயாளி பிழைத்துக்கொண் டிருப்பான்."

முட்டாள்

ஒரு பெரியவர் தமக்கு வந்த தபாலைப் பிரித்து பார்த்தபோது அதில் ஒரு கடிதத்தில் 'முட்டாள்' என்று யாரோ ஒருவன் அவரை வைது எழுதியிருந்தான். கடிதத்தில் முட்டாள் என்ற வார்த்தைத் தவிர வேறு ஒன்றும் எழுதப்படவில்லை. உடனே பெரியவர் பக்கத்தில் இருந்த நண்பரைப் பார்த்து "கடிதம் எழுதிவிட்டு கையெழுத்து போட மறந்தவர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்தமாதிரி கையெழுத்துப் போட்டுவிட்டு கடிதம் எழுத மறந்தவர்களை நான் பார்த்ததில்லை" என்றாராம்.

சீட்டாட்டம்

இரண்டு நண்பர்கள் சீட்டாடிக்கொண் டிருந்தார்கள்.

"இந்தமாதிரி அயோக்கியத்தனம் பண்ணினால் நான் உன்னோடு ஆடப்போவதில்லை" என்றான் ஒருவன்.

"என்ன அயோக்கியத்தனம்?" என்று கேட்டான் இன்னொருவன்.

"நான் சீட்டைக் கலேத்து போட்டபோது ஸ்பேட் ஆஸ் உனக்கு போடவில்லே என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். அப்படி இருக்க அது உன் கைக்கு எப்படி வந்தது?"

ஜாக்கட் துணி

மனேவி புருஷனே கடையிலிருந்து ஏதாவது ஜாக்கட் துணி வாங்கிக்கொண்டு வரும்படி சொல்லி யிருந்தாள். புருஷன் கடைக்குப் போய் ஜாக்கட் துணி கேட்டான். கடைக்காரர் "என்ன விலே, என்ன நிறம்?" என்று எல்லா விவரங்களும் விசாரித்தார். அதற்கு புருஷன் "ஏதாவது ஒன்றைக் கொடுங்கள். நான் எதை வாங்கிக்கொண்டு போனுலும் என் மனேவி திருப்பி யடிக்கப் போகிருள்." என்ருன்.

கொட்டாவி

அலுப்புத் தட்டிஞல்தான் கொட்டாவி வரும் என்று எல்லாரும் சகஜமாக நினேக்கிருர்கள். ஆனல் இது தவறு. மூளே வெகு துரிதமாக வேலே செய்யும்போதும் கொட்டாவி ஏற்படுவது உண்டு.

உதாரணமாக சீட்டு ஆடுகிறவர்களே கவனித்தால் அவர்கள் அடிக்கடி கொட்டாவி விடுவதைக் கவனிக்கலாம். எதிராளி எப்படி ஆடப்போகிருனே, நாம் எதை ஆடினல் நல்லது என்று எல்லாம் அவர்கள் மூளே வெகு தீவிரமாக வேலே செய்ய

ஆரம்பிக்கும்போது அவர்கள் இரத்தோட்டம் அதிகரிக்கிறது. இருதயம் வழக்கத்தைவிட வேக மாக அடித்துக்கொள்கிறது. அதனால் உடம்புக்கு இன்னும் அதிக பிராணவாயு வேண்டியிருக்கிறது. அதனால்தான் கொட்டாவி விட்டு அதிகப்படி காற்றை உட்கொள்ளுகிறார்கள்.

ஒரு ரூபாய் எடை

நோயாளிக்கு ஒரு ரூபாய் எடை மருந்து நிறுத்துக் கொடுக்கும்படி வைத்தியர் சொல்லி விட்டுப் போயிருந்தார். ஆனால் அடுத்த நாள் நோயாளியின் நிலைமை முதல் நாளைவிட மோசமாக இருக்கவே நோயாளியின் மனைவியைக் கூப்பிட்டு "நான் சொன்னபடி சரியாக ஒரு ரூபாய் எடை மருந்து கொடுத்தீர்களா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த அம்மாள், "என்னிடம் ஒரு ரூபாய் நாணயமே கிடைக்கவில்லை. அதற்கு பதில் அறுபத்து நாலு காலணாக்கள் இருந்தன. அதைக் கொண்டு நிறுத்து மருந்து கொடுத்தேன்" என்றாள்.

நீக்ரோக்கள்

வெள்ளையர்களைவிட நீக்ரோக்களுக்கு கண் பார்வை அதிகக் கூர்மையாய் இருக்கிறது என்று கண்டுபிடித் திருக்கிறார்கள். ஒரு குச்சியின் இரண்டு நுனிகளிலும் வெள்ளை வர்ணம் பூசி அதை இருட் டில் நூறு அடிக்கு அப்பால் வைத்துக்கொண்டு

குச்சி செங்குத்தாக இருக்கிறதா அல்லது சம மட்ட மாய் இருக்கிறதா என்று கேட்டதற்கு நீக்ரோக் களால்தான் சரியான பதில் சொல்ல முடிந்தது. வெள்ளையர்களால் முடியவில்லை.

வக்கீல் வாதம்

ஒரு வக்கீல் தன் கட்சிக்காரனுக்காக பிரமாத மாக வாதம் செய்துகொண் டிருந்தார். கடைசியாக ஜூரிகளைப் பார்த்து, "என் கட்சிக்காரன் வழக்க மாகவே திருடர்களையும் அயோக்கியர்களையும் நம்புகிறவன். அவர்களை நம்பித்தான் இந்தக் கதிக்கு வந்துவிட்டான். இப்போது உங்களை நம்புகிறான். நீங்கள்தான் அவனைக் காப்பாற்ற வேண்டும்." என்றார்.

ஐந்து மனைவிகள்

ஐந்து மனைவிகள் வைத்துக்கொண்டிருந்த ஒரு சிகப்பு இந்தியனை ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பார்த்து "இந்தமாதிரி ஐந்து மனைவிகள் வைத்துக்கொண் டிருப்பது தப்பான காரியம். யாராவது ஒருத்தியை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்ற நான்கு பேர் களையும் அனுப்பிவிடு" என்றார்.

"தாங்கள் எனக்கு ஒரே ஒரு உபகாரம் செய்யும்பட்சத்தில் நான் அப்படியே செய்கிறேன்" என்றான் சிகப்பு இந்தியன்.

"என்ன உபகாரம்?"

"நான் யாரை வைத்துக்கொள்வது என்பதை நீங்களே தீர்மானம் பண்ணுங்கள். மற்ற நான்கு பேரையும் நீங்களே போகச் சொல்லிவிடுங்கள்."

தென்னை மரத்தில் தேள் கொட்ட

தென்னை மரத்தில் தேள் கொட்ட பனை மரத்தில் நெறி ஏறிற்று என்றால் யாரும் நம்ப மாட்டார்கள். சிரிக்கத்தான் செய்வார்கள். ஆனால் நம் தேகம் சம்பந்தப்பட்டவரையில் தென்னை மரத்தில் தேள் கொட்டினால் தென்னை மரத்திலும் நெறி ஏறும், பக்கத்தில் உள்ள பனை மரத்திலும் நெறி ஏறும்.

உதாரணமாக வலது கைக்கு அளிக்கப்படும் பயிற்சியின் பலன், பயிற்சி இல்லாமலே, இடது கைக்கும் போய்ச் சேருகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். உங்கள் கைகளினால் எவ்வளவு கனம் தூக்கமுடிகிறது என்று கணக்குப் பாருங்கள். உதாரணத்துக்கு வலது கையினால் பத்து ராத்தலும் இடது கையினால் பத்து ராத்தலும் தூக்க முடிகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு பத்து நாளைக்கு வலது கைக்கு மட்டும் பயிற்சி கொடுங்கள். தினம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படி எடை தூக்கிப் பாருங்கள். பத்து நாளைக்குப் பிறகு வலது கையினால் இருபது ராத்தல் இடை தூக்க முடியும் என்றால் பயிற்சி இல்லாத இடது கையினால் பதினாறு ராத்தலாவது தூக்க முடியும்.

கைக்குட்டை

புதிதாக ஒரு சமையற்காரப்பையன் வேலைக்கு வந்து சேர்ந்தான். வீட்டு எஜமானர் சமையல் அறையில் நுழைந்த போது பையன் கைக்குட்டையால் காப்பி வடிகட்டிக் கொண்டிருப்பதைக் கவனித்து "ஏன் அப்பா இப்படி கைக்குட்டையை வீணாக்குகிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன், "நான் அழுக்குக் கைக்குட்டையைத் தானே காப்பி வடிகட்ட எடுத்தேன். நல்ல கைக்குட்டையை எடுக்கவில்லையே." என்றான்.

தூக்கம் இல்லை

ஒரு சர்க்கார் அதிகாரி தனக்குத் தூக்கமே வருவது இல்லை என்று வைத்தியரிடம் குறைபட்டுக் கொண்டார். "தினம் இரவு எத்தனை மணிக்கு படுக்கப் போகிறீர்கள்?" என்று வைத்தியர் கேட்டார். அதற்கு அந்த சர்க்கார் அதிகாரி "நான் இரவைப்பற்றிச் சொல்லவில்லை, பகலில் ஆபீஸில் தூக்கம் வரவில்லை" என்றார்.

பாத சாரிகள்

மோட்டார் விபத்துகளுக்கு ஆளான பாத சாரிகளை கணக்கு எடுத்துப் பார்த்தபோது சைக்கிள், மோட்டார் முதலியவை ஓட்டத் தெரியாத பாத சாரிகள் தான் அதிகம் விபத்துக்கு ஆளாகிறார்கள் என்று தெரிந்ததாம்.

பொய்க் கையெழுத்து

ஒருவரைப் போலவே ஒருவர் கையெழுத்துப் போடுவதற்குப் பொய்க் கையெழுத்துப் போடுவது என்று பெயர். அப்படிப் பொய்க் கையெழுத்துப் போடுவது பெரிய குற்றம்; இந்தக் குற்றம் செய்கிறவர்களைச் சிறையில் அடைத்துவிடுவார்கள்.

ஆனல் அமெரிக்காவில் ஒரு அம்மாள் பொய்க் கையெழுத்துப் போடுவதையே தன் பிழைப்பாக வைத்திருக்கிருள். இதற்காக அவரை யாரும் தண்டித்ததில்லை.

எத்தனையோ பெரிய காரியாலயங்களில் இருக்கும் தலைமை அதிகாரிகள் ஆயிரத்துக்கு மேற்பட்ட கையெழுத்துக்கள் போடவேண்டி யிருக்கிறது. ஆயிரத்துக்கு மேற்பட்ட கையெழுத்துக்கள் போடுவது என்ருல் லேசான காரியமா? ஆகவே பிறரைப்போல் கையெழுத்துக்கள் போடுவதில் மகா நிபுணரான இந்த அம்மாளை உதவிக்கு அழைக்கிருர்கள்.

வேடிக்கையும், விளையாட்டும்

வேடிக்கையும், விளையாட்டும் ஆர்ஸனிக் என்ற விஷத்தைப் போன்றவை. கொஞ்சமாக இருந்தால் நல்ல டானிக் போல் உதவும். நிறைய இருந்தால் விஷம்; கொன்றுவிடும்.

அபிசீனியாவில்

இத்தாலியர்கள் அபிசீனியாவைப் படையெடுத்தபோது, சக்கரவர்த்தி ஹெயிலி ஸெலாஸி பின்வரும் உத்தரவைப் பிறப்பித்தாராம்.

"இந்த உத்தரவைக் கேட்டதும் எல்லா புருஷர்களும், பையன்களும் அடிஸ் அபாபாவுக்கு உடனே வரவேண்டியது. கல்யாணமான ஒவ்வொருவனும், சமைத்துப் போடுவதற்காகத் தன் மனைவியை அழைத்துக்கொண்டு வரவேண்டியது. கல்யாணமாகாத ஒவ்வொருவனும் சமைத்துப் போடுவதற்காக யாராவது ஒரு கல்யாணமாகாத ஸ்திரீயைக் கூட அழைத்துக்கொண்டு வரவேண்டியது."

நிலைக் கண்ணாடி

ஒரு கடையில் சாமான்கள் மிகவும் திருட்டுப் போய்க்கொண் டிருந்தனவாம். சாமான்கள் வாங்க வந்தவர்களே சாமான்களைத் திருடிக்கொண்டு போய்க்கொண் டிருந்தார்களாம். இந்த வழக்கத்தை நிறுத்துவதற்கு கடைக்காரர் ஒரு யுக்தி பண்ணினார். கடை நிறைய அங்கங்கே நிலைக் கண்ணாடிகள் மாட்டிவைத்தார். திருடர்கள் கண்ணாடிக்கு எதிரில் திருடும்போது தங்களைத் தாங்களே கண்ணாடியில் பார்த்துக்கொண்டதால், மனச் சாட்சி குத்தவே திருடுவதை விட்டனர்.

வாலிபமா? வயோதிகமா?

சோகரஸப் படங்களும், புத்தகங்களும் பிடித்தால் நீங்கள் வாலிபர். ஹாஸ்ய ரஸப் படங்களும், புத்தகங்களும் பிடித்தால் நீங்கள் வயோதிகர்.

உங்கள் புத்திசாலித் தனத்தைப் பிறர் புகழ வேண்டுமென்று விரும்பினால் நீங்கள் யுவர். உங்கள் அழகைப் பிறர் புகழ வேண்டுமென்று விரும்பினால் நீங்கள் வயோதிகர்.

தூக்கத்தில் கழியும் நேரம் வீணாகப்போகிறதே என்று கவலைப்பட்டால் நீங்கள் யுவர். அதைப் பற்றிக் கவலைப்படாவிட்டால் நீங்கள் வயோதிகர்.

ஆறுமாதம் ஆவானேன்?

பிரபல ஹாஸ்ய எழுத்தாளரான மார்க் ட்வெயின் ஒரு பத்திரிகையில் ஆறுமாத காலம் வேலைபார்த்தார். ஆறு மாதம் ஆனதும், பத்திரிகாசிரியர் அவரைக் கூப்பிட்டு வேலைக்கு வேண்டாம் என்று சொன்னார்.

"ஏன் வேண்டாம்!" என்று கேட்டார் மார்க் ட்வெயின்.

"நீ ரொம்ப சோம்பேறி. அதனால்தான் வேண்டாம்" என்றார் பத்திரிகாசிரியர்.

"பூ! நான் சோம்பேறி என்று கண்டுபிடிக்க உங்களுக்கு ஆறுமாத காலம் பிடித்ததா? அது எனக்கு நான் வேலையில் சேர்ந்த அன்றைக்கே தெரியுமே" என்றார் மார்க் ட்வெயின்.

பெர்னார்ட் ஷா

பெர்னார்ட்ஷா எழுதிய நாடகம் ஒன்றை நடித்துக்கொண் டிருந்தார்கள். ஒரே ஒரு நபரைத் தவிர மற்ற எல்லாரும் நாடகத்தைப் பெரிதும் பாராட்டிக் கை தட்டினார்கள். அந்த ஒரு ஆள் மாத்திரம் நாடகத்தை இகழ்ந்து ஊளையிட்டான். அந்த ஆளைப் பார்த்து பெர்னார்ட்ஷா, " நாடகம் ரொம்ப மோசம் என்று உங்களுக்கும் தெரிகிறது. எனக்கும் தெரிகிறது. ஆனால் இத்தனை பேருக்கு எதிரில் நாம் இரண்டுபேர் எங்கே?" என்று கேட்டார்.

சண்டையும், சாப்பாடும்

சாப்பிடும்போது மௌனமாகத்தான் சாப்பிட வேண்டும் என்று நம் பெரியவர்கள் சொல்வார்கள். ஆனால் பெரியவர்கள் சொல்லும் வார்த்தையில்தான் நமக்கு நம்பிக்கை கிடையாதே? பெரியவர்கள் ஏதோ உளறிவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று நாம் நினைத்துக்கொண் டிருக்கிறோம்.

ஆனால் தற்கால விஞ்ஞானிகள் இது விஷய மாகப் பண்ணியிருக்கும் ஆராய்ச்சிகளைப் பார்க்கும் போது பெரியவர்கள் ஒரு நல்ல காரியத்துக்காகத் தான் இப்படிச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

சாப்பிடும்போது கோபமே கொள்ளாமல் சாப்பிட வேண்டுமாம். "இதில் உப்பு ஜாஸ்தி!" "அதில் புளி குறைவு" என்று சில புருஷர்கள் சீறி விழுகிறார்களே, அது மிகவும் பிசகாம். கோபம் கொண்டால் ஜீரண உறுப்புகள் சடாரென்று தங்கள் வேலையை நிறுத்தி விடுகின்றனவாம். இதனால் உடம்புக்கு எத்தனையோ கெடுதல்கள் விளைகின்றனவாம்.

பேச்சுக்கு இடம் இருந்தால்தானே கோபம் கொள்ளவோ, அல்லது சமையலைப்பற்றிக் குற்றம் சொல்லவோ இடம் ஏற்படும் என்று நம் பெரியவர்கள் மௌனமாக இருக்கச் சொல்லிவிட்டார்கள் போலும்!

பட்டினி

மனிதர்கள் பட்டினி கிடந்தால், அத்தனை நாள் பட்டினி கிடந்தார், இத்தனை நாள் பட்டினி கிடந்தார் என்று மூக்கின்மேல் விரலை வைக்கிறவர்கள் ஜீவ ஜந்துக்களால் எத்தனை நாள் பட்டினி கிடக்க முடியும் என்பதை அறிந்தால் திகைத்துப் போய் விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தேள்கள் ஒரு வருஷ காலமும், சிலந்திப் பூச்சிகள் ஒன்றரை வருஷ காலமும், சில புழுக்கள் ஐந்து வருஷ காலமும், பாம்புகள் இரண்டு வருஷ காலமும், தவளைகள் ஒண்ணேகால் வருஷ காலமும் பட்டினி கிடக்குமாம்.

அது என்ன ?

உபயோகிக்க வேண்டுமானல் தூக்கி அப்பால் எறிவோம். உபயோகம் இல்லை யென்ருல் எடுத்துப் பக்கத்தில் வைத்துக்கொள்வோம். அது என்ன ?

நங்கூரம்.

பௌன்டன் பேனு

பௌன்டன் பேனவைத் தம் பையன் விழுங்கி விட்டதாக ஒருவர் டாக்டருக்குப் போன் பண்ணி ஞர்.

"நான் இன்னும் கால் மணி நேரத்தில் வருகி றேன். அதுவரையில் என்ன பண்ணப் போகி றீர்கள் ?" என்று கேட்டார் டாக்டர்.

"பென்சிலால் தான் எழுதப் போகிறேன்" என்று அவர் பதில் அளித்தார்.

தேநீர்

தொன்றுதொட்டே சீனர்கள் எப்பொழுது பார்த்தாலும் தேநீர் தான் அருந்துவார்களே யொழிய தண்ணீர் குடிக்கமாட்டார்கள். தாகம் எடுத்தாலும் தேநீர்தான் அருந்துவார்களேயொழிய, தண்ணீர் குடிக்கமாட்டார்கள். தலைமுறை தலை முறையாக இதே பழக்கம் அவர்களுக்கு வந்து விட்டது.

ஒருவிதத்தில் பார்த்தால் இது மிகவும் நல்ல வழக்கம் என்றே சொல்லவேண்டும். பொதுஜன சுகாதார விதிகளில் சீனர்கள் அதிக அக்கரை எடுத்துக் கொள்வதில்லை யாதலால் அவர்களுடைய நதிகளும், குளங்களும் எப்பொழுதும் அசுத்தம் நிறைந்து, விஷக் கிருமிகள் நிறைந்தே இருக்கும். இதனல் அவர்கள் தண்ணீரை அப்படியே குடித்தால் வியாதி வந்து அவதிப் படுவார்கள். தேநீர் தான் குடிப்பது என்று அவர்கள் வழக்கம் வைத்திருப்பதால் தங்களை அறியாமலேயே ஜலத்தைக் காய்ச்சி உண்ணுகிறுர்கள்.

இரும்பு

மனிதன் உடம்பில் உள்ள இரும்பைக்கொண்டு நான்கு ஆணிகள் செய்யலாம். அவ்வளவுதான் மனிதன் உடம்பில் உள்ள இரும்பு. ஆனல் இந்த இரும்பு இல்லாவிட்டால் மனிதன் இறந்துவிடுவான்.

மனிதனுடைய ரத்தத்தில் இரும்பு கலந்திருக்கிறது. இந்த இரும்புதான் மூச்சுக் காற்றிலிருந்து பிராணவாயுவை உட்கொண்டு, அதைத் தேகம் முழுவதும் பரப்புகிறது. ரத்தத்தில் உள்ள இரும்பு குறையாமல் பார்த்துக் கொள்வதற்கு மிகச் சிறந்த வழி, கீரைகள் அதிகம் உண்ணுவதுதான். இந்தக் கீரைகளில்தான் இரும்புச் சத்து அதிகம் கலந்திருக்கிறது. ரத்தம் எளிதில் கிரகிக்கும் முறையிலும் இருக்கிறது.

புகை பிடிக்கக்கூடாது

ஒரு கோடீசுவரர் ஒரு பெரிய வாசகசாலைக்குள் தம் காரியதரிசியுடன் நுழைந்தார். அவர் வாயில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டைப் பார்த்து விட்டு, அங்கிருந்த சிப்பந்தி "ஸார்! இங்கு புகை பிடிக்கக்கூடாது. பிடித்தால் ஐந்து ரூபாய் அபராதம்" என்றான்.

"அப்படியானால் இந்தா ஐந்து ரூபாய். மீதி கொடு" என்று கோடீசுவரர் ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினர்.

"சில்லறை இல்லையே" என்றான் சிப்பந்தி.

உடனே கோடீசுவரர் தம் காரியதரிசியைப் பார்த்து "அப்படியானல் நீரும் ஒரு சிகரெட்டு பிடியும்" என்று காரியதரிசிக்கு ஒரு சிகரெட்டு கொடுத்தார்.

ராம்சே

ராம்சே மாக்டொனல்டைப்பற்றி வின்ஸ்டன் சர்ச்சில் ஒருதடவை பின்வருமாறு கூறினராம்.

"வெகு சின்ன கருத்துக்குள் வெகு நிறைய வார்த்தைகளை அடைப்பதில் ராம்சே சமர்த்தர்".

ராஜினமா

ஒருசமயம் காகிதக் கட்டுப்பாடு இலாகாவின் சிப்பந்திகள் தங்களுக்குச் சம்பளம் போதவில்லை யென்று சேர்ந்தாப்போல் ராஜினமாக் கொடுத்

தார்களாம். மேலதிகாரி, இது தவறு என்றும், ராஜிநாமாக் கொடுக்க விரும்பும் பட்சத்தில், எல்லாரும் தனித் தனிக் காகிதத்தில் ராஜிநாமா எழுதிக் கொடுக்கவேண்டும் என்றும் சொன்னாராம். அதற்கு அந்த சிப்பந்திகள், தாங்கள் அப்படிச் செய்யத் தடையில்லை யென்றும், ஆனால் காகிதச் சிக்கனத்தைக் கருதியே அப்படிச் செய்ததாகவும் பதில் அளித்தார்களாம்.

ஒரு கணக்கு

வேலைக்காரன் கோபாலினால் மணிக்கு இரண்டு அண்டா ஜலம் நிரப்ப முடியும். வேலைக்காரி லக்ஷ்மியினால் மணிக்கு ஒரு அண்டா ஜலம் நிரப்ப முடியும். இரண்டுபேரும் சேர்ந்து வேலைசெய்தால் மணிக்கு எத்தனை அண்டா ஜலம் நிரப்ப முடியும்?

கணக்குப் புலிகளாக இருந்தால் உடனே மூன்று அண்டா என்று பதில் சொல்லுவீர்கள். மனித சுபாவம் அறிந்தவர்களாக இருந்தால் ஒரு அண்டாகூட நிரம்பாது என்று பதில் அளிப்பீர்கள்.

வால் ஆடுகிறது

சில சமயங்களில் மனிதர்களைவிட நாய் எவ்வளவோ தேவலை என்று படுகிறது. நாய் வாலைத்தான் ஆட்டுகிறதே யொழிய, மனிதர்களைப் போல் நாவை ஆட்டுவதில்லை.

நாடோடி எழுதிய நூல்கள்

நாடகமே உலகம்

(மூன்றும் பதிப்பு) ரூ. 3

"In these articles the author has demonstrated with what great ease a clever writer can humorously portray the faults and foibles of our society. A score of such books can do more social reform than a thousand platfoform politicians" என்று இப்புத்தகத்தைப் பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறுகிறது.

இதுவும் ஒரு பிரகிருதி

(இரண்டாம் பதிப்பு) ரூ. 3

"சில வக்ர சுபாவங்களைக் கூர்மையாகக் கவனித்துள்ள இந்த ஆசிரியர் தமக்குள்ள ஒரு அலாதியான திறமையுடன் ஹாஸ்யம் ததும்ப எழுதியிருப்பதை ரஸிக்காமல் சிரிக்காமல் படிக்க முடியாது" என்று தினமணிப் பத்திரிகை இப் புத்தகத்தைப் புகழ்ந்துள்ளது.

பிழைக்கும் வழி

(இரண்டாம் பதிப்பு) ரூ. 2-8-0

"இது ஒரு சிறிது காலத்திற்குத் தோன்றி நின்று பின் மறையும் நூல்கள்போல் அல்லாமல் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய புத்தகமாய் இருக்கும். இதை, இதில் இரண்டாவது பதிப்பு தோன்றியிருப்பதே மெய்ப்படுத்தும்" என்று அகில இந்திய ரேடியோ இந்தப் புத்தகத்தைப் பற்றிக் கூறுகிறது.

ஒரு நாள் கூத்து

(இரண்டாம் பதிப்பு) ரூ. 3

"Witty, philosophical and in everyway humane, Nadodi is a class of Tamil writer without any rival in his way of writing in Tamil to-day. I wish he gives more books of this type" என்று விப் என்னும் கல்கத்தாப் பத்திரிகை இந்தப் புத்தகத்தைப் புகழ்கிறது.

படித்த பெண் வேண்டாம் ரூ. 3

படித்த பெண்களைக் கண்டாலே நாடோடிக்கு நடுக்கம்தான். ஏன் என்று இந்தப் புத்தகத்திலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அட பரமசிவா ரூ. 3

"வாழ்க்கையைச் சீர்திருத்த முயல்வதில் எழுத்தாளர்கள் பல முறைகளையும் கையாளுகிறார்கள். வாழ்க்கையில் தான் கண்டு சிரிப்பதை பிறரும் கேட்டு சிரிக்க வைப்பது இவற்றில் ஒன்று. இம் முறையைப் பயன்படுத்திக் கொள்வதில் நாடோடி கை தேர்ந்தவர்" என்று திருச்சி ரேடியோ இப் புத்தகத்தைப்பற்றிக் கூறுகிறது.

எங்கள் குடும்பம் பெரிது ரூ. 2-8-0

இந்தப் புத்தகம் ஒவ்வொரு குடும்பத்தாரும் படித்து மகிழவேண்டிய புத்தகம். சாதாரணமாக ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகளை வெகு ஹாஸ்யமாக இப்புத்தகம் சித்தரிக்கிறது. இதில் உள்ள யுத்த ஆரம்பம், யுத்தம் நடக்கிறது, யுத்தம் வலுக்கிறது, இறுதிவெற்றி இந் நான்கு அத்தியாயங்களும் ஹாஸ்ய சிகரத்தை எட்டிப் பிடிக்கின்றன என்று சொன்னாலும் மிகையாகாது.

ஹேம, அனுராதா — ரூ. 3

"நாடோடியின் புத்தகத்தைப்பற்றி மதிப்புரை சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது. படித்துத் தொலைக்க வேண்டிய புத்தகங்கள் அவர் எழுதுபவை எல்லாம். படிக்காவிட்டால் நஷ்டம் அவருக்கல்ல" என்று அகில இந்திய ரேடியோ திருச்சி நிலையம் இப் புத்தகத்தைப்பற்றிக் கூறுகிறது.

என்னைக் கேளுங்கோன்னு! — ரூ. 4

"தமிழர்களுக்குச் சிரிக்கத் தெரியாது, ஹாஸ்ய நுட்பத்தை அனுபவிக்கும் இதயமில்லாதவர் என்ற கூற்றைப் பொய்யாக்கிய ஒரு சில எழுத்தாளர்களில் நாடோடி ஒருவர்" என்று அகில இந்திய ரேடியோ இப் புத்தகத்தைப்பற்றிக் கூறுகிறது.

குடும்ப ரகசியம் — ரூ. 3

நாடோடி எழுதிய ரேடியோ நாடகங்களின் தொகுப்பு இந்தப் புத்தகம். கால்மணி நாடகங்களும், ஒரு மணி நாடகங்களும் உள்ளன. இதில் வெளியாகியுள்ள "ஏழையாவது எப்படி!" என்னும் ஒரு மணி நாடகம் இதுவரை அச்சில் வெளிவந்ததே இல்லை.

ஸ்திரீகள், ஜாக்கிரதை! — ரூ. 1

(துக்கடா சீரிஸ்)

புத்தகம் வேண்டுவோர் பின்கண்ட
விலாசத்துக்கு எழுதுக.

நாடோடி

தியாகராயநகர் :: சென்னை 17.